
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 4 | மே 1991 | இதழ் 5



வெளியிடுவோர் :

**ஈரோடு கிறிஸ்துவின் சபையார்**

2, மணல் மேடு வீதி, ஈரோடு-638 002.

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை

,, : ,, 11-00—12-00...ஞாயிறு பள்ளி

,, : மாலை 7-15—8-30...மாலை ஆராதனை

செவ்வாய்
புதன் } : மாலை 7-15—8-30...குடும்ப ஜெபக்கூட்டம்

வியாழன் : மாலை 7-15—8-30...வேதாகம ஆய்வு
(இரண்டாம் வியாழன் மாதாந்திர ஜெப
ஆராதனை மாலை 5-00 - இரவு 9 மணி

வெள்ளி : மாலை 7-15 - 8-30 குடும்ப ஜெபம்

சனி : மாலை 7-00 9-00...மன்றாட்டு ஜெபம்

## இதழின் உள்ளே


1. கிறிஸ்தவத்துக்கு உடனடித் தேவை ஒற்றுமை 1-2
2. நீங்கள் இன்றே கர்த்தரைச் சந்திக்க நேர்ந்தால் உங்கள் நிலை என்ன? 3-6
3. உண்மைக் கிறிஸ்தவம் பிளவுபடாதது 7-12
4. திரும்பிச் செல்வோம் வாரீர்! 13-23
5. சபை வளர்ச்சியில் பெண்களின் பங்கு 24-27

THIRUMARAI AASAAN

Editor
E.Z. SELVANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002, Tamil Nadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol 4. May—1991 Issue 5

**ஆசிரியவுரை :**

# கிறிஸ்தவத்துக்கு உடனடித் தேவை-ஒற்றுமை

*கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை வழிபடும் நன்மக்களே!*

*கிறிஸ்தவ மார்க்கத்தின் நாயகர்* **இயேசு கிறிஸ்துவும்** *அவர் தம் திருத்தொண்டர்களில் முதன்மையானவருமாகிய* **அப்போஸ்தலன் பவுல்** *அடியாரும், கிறிஸ்தவ அறத்தில் பற்றும், உறுதிப்பாடும் உள்ள அனைவரும் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்று மிகவும் உருக்கத்தோடு வலியுறுத்துகின்றனர். யோவான் 17:20-23; 1 கொரி 1:10-13; ரோமர் 15:5,6.*

**ஏன் அப்படி வற்புறுத்துகிறார்கள்?**

*அப்பொழுதுதான் பரம தந்தையாகிய தேவன் மாந்த குலத்தை அழிவிலிருந்து மீட்கும் பொருட்டு தம் ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை விண்ணுலகிலிருந்து இவ்வுலகுக்கு அனுப்பினார்; மற்றபடி இயேசு தானாகவே அந்நிலைக்கு தன்னை உயர்த்திக் கொள்ளவில்லை என உலக மக்கள் ஏற்றுக்கொண்டு நம்புவர் என்று இயேசு நமது நீண்ட ஜெபத்தில் கூறியிருக்கிறார். யோவான் 17:21;*

**ஆனால் இன்று நாம் காண்பது என்ன?**

*நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரம் என்று வர்ணிக்கப்படும் சபை (கொலோ 1:18) பல கூறுகளாகப்பிரிந்து ஒன்றுக்கொன்று இணக்கமில்லாமல் இருப்பதோடு நிற்காமல்முரண்பாடாகச்செயல்பட்டு நம்மால் 'அஞ்ஞானிகள்' என்று கருதப்படும் மற்ற சமயத்தவர்கள் நம்முடைய ஒற்றுமையின்மையைச் சுட்டிக்காட்டி இகழும்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால் கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும் அஞ்சின காரியங்கள் மெய்ப்பிக்கப்பட்டு வருவதைக் கிறிஸ்தவத்தில் உண்மையான பற்றும், பாசமும் கொண்ட நன்மக்கள் கண்டும், கேட்டும் மனம்புழுங்கி வருந்துகின்றனர்.*

இவைகள் போதாது எபைதுபோல் நாளொரு சபையும்,பொழு-தொரு குழுக்களுமாக புதிய புதிய கூட்டங்கள் மழைக்காலத்துக் காளான்கள் போல முளைத்து, தங்களுக்குச்சாதகமான சில வசனங்-களைப் பொறுக்கியெடுத்துக்கொண்டு உறுதியில்லாத ஆத்துமாக்-களைத் தந்திரமாய் வசப்படுத்தித் தாங்களே கேட்டுக்கு அடிமை, களாக இருந்தும், பிறருக்குச்சுயாதீனத்தை வாக்குத்தத்தம்செய்தும், ஆசீர்வாதங்களை வாரிவழங்கியும் நமது இரட்சகரின் உடல்உறுப்பு களைக்கண்டதுண்டமாக வெட்டிக் கூறுபோட்டு ஏலம்விடுகிறோம்.

சரீர சுகமளிப்பு, மூடநம்பிக்கைகளுக்குத் தீனிபோடும் பில்லி, சூனியம், குறி சொல்லல், பிசாசு விரட்டல் போன்ற உளுத்துப் போன மாயாஜால வித்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து விளம்பரப்படுத்தி இயேசு பெருமானின் சிறந்த போதனைகளையும், சத்தான அருள்நெறிகளையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு கிறிஸ்து இயேசு இவ்வுலகுக்கு வந்த தலையாய நோக்கத்தை லூக் : 19:10 இருட்டடிப்புச்செய்து தங்களை மேன்மைபடுத்திக் கொண்டு அலை கிறோம். கிறிஸ்தவ மார்க்கத்தின் 'விடிவெள்ளி' மார்ட்டின் லூதருக்கு முற்பட்ட காலத்தை 'இருண்டகாலம்' என்று வேத அறிஞர்கள் வர்ணிப்பர். ஆனால் இன்று அதைவிட மோசமான 'பேயாட்சிகாலம்' என்றால் கூட மிகையாகாது. 'மனுஷகுமாரன் வரும்போது பூமியில் விசுவாசத்தைக் காண்பாரோ?' என்கிற இயேசுவின் ஐயப்பாட்டை உறுதிசெய்வது போன்ற செயல்கள் நாளுக்குநாள் பெருகிவருகின்றது லூக் 18-8

## இந்த அவலநிலை மாற என்ன செய்யலாம்

மேற்குறிப்பிட்டுள்ள கொடுமைகளை முன்னொருகாலத்தில் கண்டும் கேட்டும் மனம் வருந்தின நீதிமானாகிய லோத்தைப்போல் வேதனையால் தவிக்கிற பரிசுத்தவான்கள் அனைவரையும் ஓர் அணியாகத் திரட்டி கள்ள போதகங்கள் தமிழ்மண்ணில் வேரூன்றித் தழைத்து வளராதபடி தடுத்து நிறுத்துவதற்காக நல்ல உள்ளங்கள் ஒன்றுகூடி கண்ணீரோடு ஜெபிக்கலாம்.

தவறான போதகங்களின் ஊற்றுக்கண்களை அடைத்து, முதலாம் நூற்றாண்டில் நடைமுறையில் இருந்த தூய கிறிஸ்த-வத்தை மீட்டு அமைக்கும் வகையில் மாந்த அறிவால் கறைபடாத புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவத்தைப் பறைசாற்றலாம்.

பட்டி, தொட்டிகள், சிற்றூர், பேரூர், நகரங்கள் தோறும் சிந்திக்க விரும்புகிற இளைஞர்கள், மாணவச் செல்வங்கள் ஆகி-யோரை ஒன்று திரட்டி, வேத முகாம்கள் நடத்தி திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலாகிய (1பேதுரு 2:3) புதிய ஏற்பாடு உபதேசங்களைக்கற்பிக்கலாம் (அப்17:11) நற்செய்திப் பேருரைகள் நிகழ்த்தலாம்.

கிறிஸ்து இயேசுவின் அருள் நெறிகளை விளக்கும் நூல்கள் திங்கள், வார இதழ்கள், சிற்றறிக்கை ஆகியவைகளை அச்சிட்டு வழங்கலாம்.

உண்மைக் கிறிஸ்தவம் தழைத்தோங்க வேண்டும் என்று விரும்பும் சான்றோர்களே! தடம்புரண்டு கிடக்கும் சத்தியமார்க்-கத்தை மீட்டு அமைக்கும் அவசரத்தேவையை உணர்ந்து செயல் பட அனைவரையும் வாரீர்! வாரீர்! என்று கரம்கூப்பி அழைக்-கிறோம்.

E. Z. செல்வநாயகம்

# நீங்கள் இன்றே கர்த்தரைச் சந்திக்க நேர்ந்தால் உங்கள் நிலை என்ன?

வாழ்க்கை என்றால் என்ன? என்பது பற்றி பலர் சரியாக மதிப்பீடு செய்வதில்லை. அது நாம் நினைப்பதைக் காட்டிலும் பொருள் பொதிந்தது; சிந்தனைக்குரியது. ஆனால் சிலருடைய செயல்முறைகளைப் பார்த்தால் நாளை என்று ஒன்று உண்டு என்பதை அவர்கள் நினைத்துக் கூடப் பார்ப்பதில்லை. நாம் சதாகாலமும் வாழ்ந்து கொண்டேயிருப்போம் என்பது வேறு சிலருடைய எண்ணம். பலர் திடீர் திடீர் என்று நாம் கண் எதிரிலேயே மரிப்பதைக் காண்கிறோம். இன்னும் பல மரணங்களைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். ஆனால் அவைகளைப் பற்றியெல்லாம் சிந்தித்துப் பார்ப்பதேயில்லை. அது அவர்களுக்குத்தானே நாம் ஏன் கவலைப் பட வேண்டும்? என்று எண்ணி, கண்டு கொள்ளாமல் வழக்கம் போல நடந்து கொள்ளுகிறோம். நம்முடைய நிலையை சிறிது நேரம் ஒப்பிட்டுப் பார்க்காமல் நம்முடைய காரியங்களைப் பார்த்துக் கொண்டு நம் மன விருப்பத்தின்படி தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இது ஞானமான காரியம் அல்ல. நம் வாழ்க்கையைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இதைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கத் தூண்டும் வகையில் நான் உங்களை ஒரு கேள்வி கேட்கட்டும் இன்று நீங்கள் கர்த்தரைச் சந்திக்க நேர்ந்தால் உங்கள் நிலை என்ன? அதாவது இன்று நீங்கள் மரித்துப் போக நேரிட்டால் உங்கள் நிலை என்ன? ஆம். இந்தக் கேள்வி உங்களுக்கு மட்டுமல்ல. நான் உள்பட எல்லாருக்கும் பொருந்தும். ஏனெனில் உலகத்தில் பிறந்த எல்லோருமே ஏதோ ஒரு கால கட்டத்தில் மரித்தே ஆக வேண்டும். ஆகவே இதைப் பற்றி சிறிது சிந்திப்போம்.

தற்காலத்தில் சடுதி மரணத்தைப் பற்றி அதிகமாய்க் கேள்விப்படுகிறோம். இதய நோய், இரத்தக் கொதிப்பு, விபத்து என்று எத்தனை எத்தனையோ விதங்களில் மக்களின் உயிர் பிரிக்கப்படுகிறது. அது நமக்கும் எந்த சமயத்திலும் நேரலாம் அல்லவா? அப்பொழுது நம்முடைய நிலை என்ன? நீங்கள் கர்த்தரைச் சந்திக்க ஆயத்தமாக இருக்கிறீர்களா? ஒரு வேளை நீங்கள் நான் இவ்வளவு சீக்கிரமாக சாவேன் என்று நினைக்கவேயில்லை. இரட்சிப்பைக் குறித்து பின்னே பார்க்கலாம். இப்பொழுது அதற்கு என்ன அவசரம் என்று சொல்வீர்களா? அப்படியானால் வாழ்க்கையைப் பற்றி நீங்கள் கொண்டிருக்கிற எண்ணம் எவ்வளவு தவறானது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

ஒருவன் இளைஞனோ, முதியவனோ, நல்ல உடல் நலம் உள்ளவரோ வியாதியுள்ளவரோ எப்படிப்பட்ட நிலையில் இருந்தாலும் ஒரு நாள் மரிக்கப் போவது உறுதி, நாம் விரும்புகிறோமோ இல்லையோ நாம் கடவுளை நம்புகிறோமோ இல்லையோ அதைப்பற்றியெல்லாம் பேச்சுக் கிடையாது. மரணம் உறுதி. ஆனபடியால் நம்முடைய இவ்வுலக வாழ்க்கையின் பெரும் பகுதியை வரப்போகிற நித்திய வாழ்வு சம்பந்தமான சிந்தனையில் ஈடுபடுத்துவதே அறிவுடையோர் செயல்.

இப்படிச் சொல்லும் போது சிலபேருக்கு மரணத்துக்கு பிறகு மறு வாழ்வு ஒன்று இருக்கிறது என்கிற விஷயத்தில் நம்பிக்கை இல்லை. அப்படிப்பட்டவர்கள் பரிதாபத்துக்குரியவர்கள். அவர்கள் சரீர மரணமே மனித வாழ்வின் இறுதி என்ற எண்ணத்தில் எந்த அநியாயத்தைச் செய்தாவது இந்த வாழ்க்கையில் எல்லா சுகத்தையும் அனுபவித்து விடவேண்டும் என்ற துடிப்பில் பல பாவங்களைக் கூசாமல் செய்கிறார்கள். அவர்கள் மிருகங்கள், பறவைகள், நீர் வாழ் ஐந்துக்கள் போன்று தங்களுடைய வாழ்க்கையும் இந்த உலகத்தோடு முடிந்து போகிறது என்று எண்ணுகிறார்கள். இப்படிச் சிந்திக்கிற குறைமதியாளர்களைப் பார்த்து இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாக இருந்தால் எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப் படத்தக்கவர்களாயிருப்போம். 1 கொரி 15:19 நீங்கள் எப்படிப் பட்ட நம்பிக்கையுள்ளவர்கள்? இம்மை, மறுமை என்பதை விசுவாசிக்கிறீர்களா?

நான் ஒரு இரகசியத்தை உங்களுக்கு சொல்லுகிறேன். பலர் எண்ணிக்கொண்டிருக்கிறபடி நம்முடைய வாழ்க்கை கல்லறையோடு முடிந்து போவதில்லை. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் மரணத்துக்குப் பிறகு ஒரு வாழ்க்கை உண்டு என்பதை வேதாகமம் திட்டமாகச் சொல்லுகிறது. எபிரேய நிருபத்தில் 'அன்றியும், ஒரே தரம் மரிப்பதும் பின்பு நியாயத் தீர்ப்பு அடைவதும் மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கின்றபடியே (எபி 9:27) கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதையும் அவருடைய குமாரன் தான் இயேசு கிறிஸ்து என்பதையும் ஒருவர் ஏற்றுக் கொள்ளாமல் கூட இருக்கலாம். அதனால் தேவனுடைய வசனங்கள் பொய்யாகி விடாது. அந்தப்படி முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும். நாவு யாவும் தேவனை அறிக்கை பண்ணும் என்று என் ஜீவனைக் கொண்டு உரைக்கிறேன் என்பதாய்க் கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது. ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான். ரோமர் 14:11,12 இவைகளையெல்லாம் நீங்கள் இப்பொழுது நம்பாமல் கூட இருக்கலாம். அது பற்றிப் பரவாயில்லை. தேவன் நடக்கும் என்று சொல்லுகிற காரியங்கள் உரிய காலங்களில் நடக்கும் போது உங்களையும் அறியாமல் உங்கள் முழங்கால்கள் முடங்கும். உங்கள் நாவுகள் அறிக்கையிடும்.

மேலும் கர்த்தர் சொல்லுகிறார்: பொது உயிர்த்தெழுதல் நடக்கும் போது கல்லறையில் உள்ள அனைவரும் எழுந்து வருவர் என்று யோவான் 5 24-29ல் உள்ள வசனப்பகுதி கூறுகிறது. என் வசனத்தைக் கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல் மரணத்தை விட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்.

மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது. அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுள்ளவராயிருக்கிறது போல குமாரனும் தம்மில் தாமே ஜீவனுடையவராகயிருக்கும்படி அருள் செய்திருக்கிறார். அவர் மனுஷ குமாரனயிருக்கிறபடியால் நியாயத் தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார். இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம். ஏனென்றால் பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும். அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்.

**மேற்கண்ட வசனப்பகுதியில் சொல்லப்பட்டுள்ளவைகள் என்ன?** சரீரத்தில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் ஆன்மாவில் செத்தவர்களாக இருக்கும் மக்கள், அவருடைய சத்தத்தைக் கேட்டு தேவனிடத்தில் விசுவாசம் வைக்கிறவர்கள் ஆக்கினைத்தீர்ப்படையார்கள். ஏனெனில் அவர்கள் ஆன்மீக மரணத்தைக் கடந்து விட்டார்கள் அதாவது அவருக்குக் கீழ்ப்படிந்த மக்கள் நித்திய நரகத்துக்குத் தப்பி கிறிஸ்துவுக்குள் கிடைக்கும் புதுவாழ்வைப் பெற்று நித்திய வாழ்வுக்கான நம்பிக்கையோடு வாழ்கின்றனர். ஆயினும் குறிப்பிட்டுள்ள ஒரு நாள் வரும் அந்நாளில் நல்வினை, தீவினை செய்தவர்களும் நீதிமான்களும், அக்கிரமக்காரர்களும் ஆகிய அனைவரும் தங்கள் கல்லறையிலிருந்து உயிரோடே எழுந்து வருவர். நல்வினை செய்தவர்கள் அல்லது அவருடைய வார்த்தைகளுக்குச் செவி கொடுத்துக் கீழ்ப்படிந்தவர்கள் நித்திய ஜீவனுக்கென்றும், தீவினை செய்தவர்கள் அல்லது அவருடைய வார்த்தைக்குச் செவி கொடாதவர்கள் ஆக்கினைத் தீர்ப்பு அடையும்படிக்கும் எழுந்திருப்பார்கள் என்று விளக்கம் கொடுக்கிறார்

மேலும் மரணத்துக்குப் பிறகும், உயிர்த்தெழுதலுக்குப் பிறகும் நியாயத் தீர்ப்பு ஒன்று உண்டு என்றும் கூறுகிறார். தீயவர்கள் ஆக்கினைத் தீர்ப்பு அடைவதற்கு எழுந்திருப்பார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறதே. பின் எதற்கு நியாயத் தீர்ப்பு? தீயவர்கள் நியாயத் தீர்ப்பு நாளிலே விசாரணைக்குக் கொண்டு வரப்பட்டு நித்திய அழிவுக்கு ஒப்புக்கொடுக்கப்படுவர், கர்த்தர் தாமே நீதியுள்ள நியாயாதிபதி அவர் பாரபட்சமில்லாமல் நியாயம் விசாரிப்பார் அப்போஸ்தலனாகிய பவுல் 'மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார். அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை நீதியாய் நியாயம் தீர்ப்பார். அந்த

மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதன்நிச்சயத்-இங்கே சொல்லபடுகிற நீதியுள்ள நியாயாதிபதி (அப் 17:31) அவர் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்றும், அவர் மூலமே மனுக்குலத்துக்கு நம்பிக்கை உறுதி செய்யப்பட்டிருக்கிற-தென்றும் அவரே மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தவர் என்றும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறார் மேலும் 2 கொரி 5:10ல் ஏனென்றால் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக் காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும், கிறிஸ்துவின் யாயாசனத்துக்கு முன்பாக வெளிப்படவேண்டும் என்று கூறுகிறார். இறுதியாக கிறிஸ்துவானவர் நியாயத்தீர்ப்பின் போது தீயவர்கள் நல்லவர்கள் நிலைகளைப் பற்றிக் குறிப்பிடும்போது தீயவர்கள் நித்திய ஆக்கினைக்கும், நல்லவர்கள் நித்திய ஜீவனுக்கும் அனுப்பப்-படுவர் என்று கூறுகிறார். மத் 25:46 அதை ஒருவராலும் ஒரு போதும் மாற்றவே முடியாது.

நண்பனே, சகோதரியே! இன்று நீ மரிக்க நேர்ந்தால் உன் நிலை என்ன? கர்த்தரை சந்திக்க ஆயத்தமா? நீ கர்த்தருக்குக் கீழ்படியாமல் இருந்தால் நீ கர்த்தரைச் சந்திக்க ஆயத்தமாக இல்லை என்று பொருள். நீ மரிக்கும் போது என்ன நிலையில் இருக்கிறாயோ அதே நிலைதான் நியாயத் தீர்ப்பிலும் நித்தியத்திலும் தொடரும் காலமெல்லாம் நரகத்தில் கழிக்க விரும்புவாயா? அழுகையும் பற்-கடிப்பும் நிறைந்த அவ்விடத்தில் சதாகாலங்களிலும் இருப்பது என்பது எவ்வளவு கடினமானது என்று சிந்தித்துப் பார். அது மாத்திரமல்ல பிசாசும் அவனுடைய தூதர்களும் அவனால் ஆட்-கொள்ளப்பட்ட அக்கிரமக்காரர்கள் அனைவருமே அங்கே தான் இருப்பார்கள்.

இன்றைக்கு நீ கர்த்தரை சந்திக்க விரும்பினால், அதை இப்பொழுதே செய் என்று உற்சாகப்படுத்துகிறேன் அப்படிச் செய்-வாயானால் நீ இன்றே நாளையோ அல்லது எப்பொழுதோ மரிக்க நேர்ந்தாலும் சரி. அதைப் பற்றிக் கவலையே வேண்டாம். நீ கர்த்தரை மகிழ்ச்சியோடு சந்தித்து, 'உண்மையும் உத்தமமும் உள்ள ஊழியக்காரர்களே! உலகம் உண்டானது முதல் உங்களுக்-காக ஆயத்தம் செய்யப் பட்டிருக்கிற நித்திய மகிழ்ச்சிக்குள் பிர-வேசியுங்கள்' என்று இயேசுவால் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். அது எவ்வளவு மகிழ்ச்சிகரமான வேளையாக இருக்கும் என்று எண்ணிப்-பாருங்கள். அப்படிப் புத்திசாலித்தனமாக தீர்மானம் செய்கிறவர்-களுக்கு ஒருபோதும் துக்கமே இருக்காது. நீங்கள் புத்திசாலிகளாக இருக்க ஜெபிக்கிறேன்.

இப்பொழுதே நீங்கள் தேவன் மேல் விசுவாசம் வைத்து, உங்கள் பாவத்துக்காக துக்கப்பட்டு, மனம் திரும்பி, இயேசுவே தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு உங்கள் பாவங்கள் போகக் கழுவப்பட திருமுழுக்குப் பெற்றுக் கொள்வதின் மூலம் கர்த்தர் உங்களை அவருடைய சபையில் சேர்த்துக் கொள்வார். பிறகு நீங்கள் கிறிஸ்தவர்கள் என்ற ஆசீர்வாதத்துக்குரிய நிலையை அடைவீர்கள். மாற்கு 16 16 அப் 2:47 அப் 11:26.

இவைகளை வாசிக்கிற நண்பனே, சகோதரியே! திருவசனத்-தைக் கேட்கிறவர்களாக மாத்திரம் இராமல் அதைச் செய்கிறவர்-களாயும் இருங்கள், தயவு செய்து எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் செயல்படுங்கள். இதுவே சரியான தருணம். வாய்ப்பை நழுவ விடாதீர்கள். காலம் சமீபித்து விட்டது.

# உண்மை கிறிஸ்தவம் பிளவுபடாதது

''கார் ஒன்று இந்தப் பக்கமாக வந்ததா? பதட்டமாகக் கேட்டார் முதியவர் ஒருவர். பதில் வரவில்லை மாறாக அங்கிருந்து கேள்விகள் தான் வந்தன. காரா? என்ன கார்? மாருதியா? அம்பாஸிடரா? பியட்டா?-இது இளைஞன் ஒருவனின் கேள்விக் கணைகள். ''அதெல்லாம் இல்லை, கார் அவ்வளவுதான்'' சற்று எரிச்சலுடன் சொன்னார் பெரியவர்.

''என்னையா கோபப்படுகிறீர்? என்ன கார் என்று சொல்லாமல் கார், கார் என்றால் எப்படிச் சொல்வது? எத்தனையோ ரகமான கார்கள் வருகின்றன, போகின்றன. என்ன கார் என்று சொன்னால்தானே சரியாகப் பதில் தரமுடியும்?''இது இளைஞனின் சமாதான விளக்கம்.

இருவருமே தங்கள் தங்கள் சூழ்நிலையில் நியாயமாகத்தான் நடந்து கொண்டார்கள் என்றே நினைக்கத் தோன்றுகிறது. முதல் முதலில் கார்கள் மார்க்கெட்டுக்கு வந்தபோது எல்லாக் கார்களும், ஒரே மாதிரியாகத்தான் இருந்தன. அந்த நாட்களில் கார் என்றால் போதும் மக்கள் புரிந்து கொள்வார்கள். இன்று அப்படியல்ல; தற்காலத்தில் புதிய புதிய கம்பெனிகள் புதுப்புது ரகமான கார்களை உற்பத்தி செய்து மார்கெட்டுக்குள் விடுகின்றனர். ஆகவே இளைஞன் பதில் கொடுக்க முடியாமல் தடுமாறினான். அது அவனுடைய குற்றமன்று.

கிறிஸ்துவின் சபை விஷயத்திலும் இதுவே நிலைமை. அன்றொரு நாள், நடுத்தர வயது உள்ளவர், பார்த்தால் படித்து உத்தியோகம் பார்பவர் போல் தோற்றம். நீங்கள் எந்தச் சபையைச் சேர்ந்தவர் என்று கேட்டார்.

நான் கிறிஸ்துவின் சபையைச் சேர்ந்தவன் என்று மரியாதையாகத் தான் சொன்னேன். அவருக்கு கொஞ்சம் வருத்தம். அதைக் காட்டிக் கொள்ளாமல் அது சரிஐயா, எந்த ஐக்கியம் என்று தான் கேட்டேன் என்றார். ஐக்கியம் அது இது எல்லாம் இல்லை. கிறிஸ்துவின் சபை, அவ்வளவுதான் என்றேன். அப்படியானால் நாங்கள் எல்லாம் சாத்தான் சபைகளா? என்று கோபித்துக் கொண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டு போய் விட்டார்.

பரிசுத்த வேதாகமத்தில் பல சபைகளைப் பற்றிய பிரஸ்தாபம் கிடையாது. கிறிஸ்துவைப் பின்பற்றுகிற மக்களிடையேயும் வேற்றுமை கிடையாது. ஒரே சபை. (எபே 4:4) கிறிஸ்துவின் சுவிஷேசத்துக்கு கீழ்படிந்தவர்கள் அனைவரும் கிறிஸ்தவர்கள் அப் 11:26.

ஆனால் அந்த நிலை மாறி வீதிக்கொரு சபை ஆளுக்கொரு உபதேசம் என்ற நிலை வந்து விட்டது. ஆகவேதான் அந்த மனிதர்

கோபப்பட்டுக் கொண்டார். அது தற்காலத்தில் வாழுகின்ற நம்முடைய குற்றமன்று. ஏனெனில் நாம் இந்த பிரிவினை வாதத்தை உருவாக்கவில்லை. பல சபைகள் தோன்றி இயங்கிக் கொண்டிருக்கிற காலத்தில் நாம் பிறந்திருக்கிறோம். பிரிவினை வாதத்தை நாம் நம்முடைய முன்னோர்களிடமிருந்து பூர்வீக சொத்தாக பெற்றுக்கொண்டிருக்கிறோம், விரும்புகிறோமோ, இல்லையோ நாம் தோன்றுவதற்கு முன்னரே பல சபைகள் என்ற நிலை நன்கு வேர்விட்டு தலைத்து நிற்கிறது. அதன் நிழலில் நாம் அண்டிக் கொண்டிருக்கிறோம். தந்தையும், தாத்தாவும் ஏற்றுக்கொண்டனர். நாமும் பின்பற்றுகிறோம்.

இப்படிப்பட்ட காரணங்களால் வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள ஒரே சபை எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பார்ப்பது சற்றுக் கடினமாகத் தோன்றுகிறது. இருப்பினும் முயன்று உண்மையைக் கண்டு பிடிப்போம். ஏனெனில் எல்லாவற்றையும் சோதித்துப் பார்க்கும் படியும், வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்படியும் நமக்கு அறிவுறுத்தப் பட்டிருக்கிறது. 1தெச-5:21; யோவான் 5:39; அப்17:1,

இரட்சிக்கப் பட்டவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் என்று வாசிக்கிறோம். அப் 2.47. **எந்த சபையில்?** சவுல் சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான் என்று அப் 8:3ல் வாசிக்கிறோம். **எந்த சபையை?** எப்படி கார் கண்டுபிடித்த நாட்களில் கார் என்றால் மக்கள் எளிதில் புரிந்து கொண்டார்களோ அவ்வாறே சபை என்று வேதம் குறிப்பிடும்போது ஒரே சபையைத்தான் குறிப்பிடுகிறது என்று கொள்ள வேண்டும். இயேசு என் சபையைக் கட்டுவேன் 'என்று' ஒருமையில் தான் சொன்னார் மத் 16:18. அதாவது நான் ''கிறிஸ்தவத்தை ஸ்தாபித்தேன்'' என்றார், இயேசு சபையில் அன்பு கூர்ந்து ........ தம்மைத்தாமே அதற்கு ஒப்புக் கொடுத்தார் ''என்று வாசிக்கிறோம் எப 5; 25-27 வேதாகமத்தில் சபை என்றால் அழைக்கப்பட்டவர்களின் கூட்டம் என்று பொருள். உதாரணமாக இஸ்ரவேலரை ''சபை'' என்று வேதாகமம் குறிப்பிடுகிறது. ஏனெனில் தேவன் அவர்களை எகிப்து தேசத்திலிருந்து விடுதலையாக்கி அழைத்துக் கொண்டார். அப் 7:38 சவுல் சபையைத் துன்புறுத்தினான் என்று சொல்லும்போது சபையிலுள்ள ஆண்களையும், பெண்களையும் துன்புறுத்தினான் என்றே பொருள். அத் 8:1-3 சபை என்பது ஆகுபெயர்; சபையிலுள்ள மக்களையே குறிக்கும். கட்டிடத்தைக் குறிக்காது. சபை என்பது தேவனுடைய ஆவிக்குறிய மாளிகை. அது ஜீவனுள்ள கற்களால் ஆனது 1 பேதுரு 2:5 ஆகவே சபை என்றால் கிறிஸ்தவர்களையே குறிக்கும்.

மேலும் அப்போஸ்தலன் பவுல் அப் - 20:28ல் கூறும்போது இயேசு தம்முடைய இரத்த்தை விலைக் கிரயமாகக் கொடுத்து

சபையை வாங்கினார் என்று குறிப்பிடுகிறார். ஆகவே யார் எல்லாம் கிறிஸ்துவின் இரத்தத்தினால் வாங்கப்பட்டிருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் சபையில் கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். ஆகவே இயேசுவின் இரத்தத்தால் கிரயமாகக் கொள்ளப்பட்ட-அழைக்கப்பட்ட இரட்சிக்கப்பட்ட மக்கள் அனைவரும் கிறிஸ்தவர்களே. இப்படி தேவன் அழைக்கப்பட்ட மக்களை, கிறிஸ்துவின் இராஜ்ஜியத்துக்குட்படுத்தியிருக்கிறார். கொலோ 1;13 (சபைக்கு இன்னொரு பெயர் இராஜ்ஜியம் என்று அறிக) எவ்வாறு ஒரு குழந்தை பிறந்தால் தன்னுடைய தகப்பனாருடைய குடும்பத்துக்குள் சேர்த்துக்கொள்ளப்படுகிறதோ அதே போன்று மக்கள் ஆவியினாலும், ஜலத்தினாலும் பிறக்கும்போது கிறிஸ்துவின் இராஜ்ஜியமாகிய சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். யோவான் 3:3,5 சபைக்கு இன்னும் ஒரு பெயர் கிறிஸ்துவின் சரீரம். கொலோ 1;18 :-

மக்கள் ஆவியானவரின் உபதேசங்களைக் கேட்டு (வேத வசனங்களை) அவருடைய சரீரமாகிய சபைக்குள் திருமுழுக்குப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். 1 கொரி 12:13 வேதாகமத்தின்படி கிறிஸ்தவர்கள் ஆகிறார்கள்-குடும்பத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்-இரஜ்ஜியத்தின் பிள்ளைகளாகிறார்கள் என்று பொருள். எந்தச் சபை என்ற பிரச்சனைக்கே இடம் இல்லை ஏனெனில் வேதாகமத்தில் சபை என்பது ஒன்றுதான். ஆனால் இன்றைய உலகில் பல சபைகள் அவதாரம் எடுப்பதற்கு யார் காரணம்? ஒன்றாக இருந்த சபை இப்படி சின்னாபின்னமானது எப்படி? அதற்கு வேதாகமமே பதில் கூறுகிறது. வாசித்துப்பார்ப்போம்.

**1, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள் :-** *1 தீமோ 4:1*

விசுவாசம் என்பதை ஆங்கிலவேதாகமம் ''The faith'' என்று குறிப்பிடுகிறது. அப் 6:7; 13:8; 14:22 கலா 1:23, அதாவது விசுவாசம் என்பது ஒருமை எபே 4:5

**2 சுவிஷேத்தைப் புரட்டுவார்கள் :-** *கலா 1:7*

சுவிசேஷப்புரட்டு அபாயகரமானது. ஏனெனில் சுவிசேஷமே கிறிஸ்தவத்தின் இதயம். இதயத்துக்கு கேடுவந்தால் சரீரத்துக்கு ஆபத்து. அப்படிப்பட்ட புரட்டில் ஈடுபடுகிறவர்கள் எப்படிப்பட்டவர்களானாலும், வானத்தில் இருந்துவந்த தேவதூதனானாலும் சபிக்கப்பட்டவர்கள் என்று வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது. காலா 1:8,9. ஏனெனில் கிறிஸ்தவம் மாசுபடாமல் காக்கப்பட வேண்டும் என்பதே தேவசித்தம்.

**3: ஆரோக்கியமான உபதேசத்தைப்பொறுத்துக்கொள்ள மாட்டார்கள் :-** *2 தீமோ 4:3*

ஜென்ம சுபாவமுள்ள மாந்தர்களின் எண்ணம் தேவசித்தத்துக்கு எதிர்திசையில் இயங்கும் தன்மையுள்ளது. கலா 5:17. ஆகவே தேவ ஆலோசனைகள் பல மனிதர்களுககு பிடிக்காது. அதனால் தேவன் அவர்கள் பொய்யை விசுவாசிக்கும் ஆவியை அவர்களுக்குள் அனுப்புவார். 2தேச 2:10-12.

இப்படியாக மனிதர்கள் தூயகிறிஸ்தவத்தின் தன்மையைக் கறைபடுத்தி கட்டுக்கதைகளை விரும்பி ஏற்றுக்கொண்டார்கள்,

**4. கற்றுக்கொண்ட உபதேசத்துக்கு விரோதமாக பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குவார்கள் :-**

அப்போஸ்தலன் பவுல் ரோம் நகரில் உள்ள சபையாருக்கு ''சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்துக்கு விரோதமாக பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்கிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து அவர்களை விட்டுவிலகவேண்டும்'' என்று புத்தி சொல்லுகிறார். ரோமர் 16:17. அப்போஸ்தலன் யோவான் கூட கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும், குமாரனையும் உடையவன். ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமல் இருந்தால் அவனை உங்கள் வீட்டில் ஏற்றுக் கொள்ளாமலும் அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். 2 யோ 9-11 இருந்தபோதிலும் தற்காலத்தில் மனிதர்கள் கிறிஸ்துவின் தூயஉபதேசத்தை உதறித்தள்ளிவிட்டு தங்கள் மனம்போல் நடக்கின்றனர்.

**5. முதலாம் நூற்றாண்டு சபைக்குள் மாம்ச சிந்தையுள்ள மனிதர்கள் பிரிவினைவாதத்தைக் கொண்டு வந்து புகுத்தினர் :-**

பவுல் கொரிந்து சபையாருக்கு கருத்து ஒருமித்தவர்களாகவும் பிரிவினையற்றவர்களாகவும் ஒருமனமும் ஒரு சிந்தையுள்ளவர்களாக சீர்பொருந்தியிருக்க வேண்டும். என்று புத்தி சொல்லுகிறார்; 1:10. ஆனால் பிரிவினைமார்க்கம் உருவானதே இங்கேதான் என்று எண்ணும்படி நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவன், நான் கேபாவைச் சேர்ந்தவன், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவன் என்றும் தனித்தனி முத்திரை குத்திக்கொண்டு போர்க்கோலம் பூண்டனர். 1 கொரி 1;12 இந்தப்பிரிவினை வாதம். இயேசு கிறிஸ்துவும், பிதாவும் ஒன்றாயிருக்கிறது போல அவரைத் தொழுகிற மக்கள் அனைவரும் ஒன்றாக இருக்கவேண்டும் என்ற இயேசுவின் ஜெபத்தை அர்த்தமற்றதாக்கி விட்டது. யோவான் 17;20,21.

அப்போஸ்தலன் பவுல், சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமைப் பண்பாட்டைக் காத்துக் கொள்ளவேண்டும் என்று உருக்கமாய் வேண்டுகோள் விடுகிறார். ஒரே நம்பிக்கை, ஒரே சரீரம், ஒரே ஆவி, ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம், ஒரே தேவன் என்பதை விளக்கி பிரிவினை பாவம் என்று சொல்லாமல் சொல்லுகிறார். எபே 4:3-7. அவர் வேண்டுகோளும் இன்று நிராகரிக்கப்பட்டிருக்கிறது

**6: இறுதியாக சபையை விட்டே விலகினார்கள் :**

ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து கடைசியில் மனிதரையே கடித்த, கதையாக, முதலில் விசுவாசத்தை விட்டுவிலகிய மனிதன் கொஞ்சம் கொஞ்சமாய் சுவிசேஷத்தை, சத்தியத்தை, கொள்கையை, ஐக்கியத்தை விட்டுவிலகி இறுதியாக சபையை விட்டே விலகினர். அப் 20:28-30

எபேசு பட்டணத்து மூப்பர்கள் தங்களையும், தங்களிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்த மந்தையாகிய சபையையும கண்காணிக்கும்படி எச்சரிக்கப்படுகின்றனர். இந்த மந்தை கிறிஸ்துவின் இரத்தத்தினால் வாங்கப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது (வ 28) இந்த மூப்பர்கள் எபேசுப் பட்டணத்தில் இருந்த சபையை, மேய்ப்பர்கள் மந்தையைக் காப்பதுபோல் காக்க வேண்டும் என்று அறிவுரை கூறுகிறார். ஏனெனில் மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும் உங்களில் சிலர் எழும்பி சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி, மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன். (வ 29,30) என்று எச்சரித்திருந்தார். எப்படி ஓநாய்களால் மந்தை சிதறடிக்கப்படுமோ அவ்வாறு கள்ளப் போதகர்களால் சபையும் சிதறடிக்கப்படும். இந்த சண்டாளர்கள் கிறிஸ்து தம் விலை மதியாத இரத்தத்தைச் சிந்திச் சம்பாதித்த சபையை சின்னாபின்னப்படுத்தி கிறிஸ்துவின் சபையைக் கூறுபோட்டு மகிழ்ந்தனர்.

தூர்போன மண்சட்டி நாளுக்கு நாள் மேலும், மேலும் விரிசல் அடைவது போல் அன்று விதைக்கப்பட்ட பிரிவினை வாதம் என்ற நச்சுச்செடி, பிரிவினை மார்க்கங்களாக வளர்ந்து பெருகி இன்றைக்கு எண்ணிப்பார்க்க முடியாத அளவுக்கு உண்மைக் கிறிஸ்தவத்தை ஆக்கிரமித்து மறைத்துக் கொண்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லாத தற்காலத்துக் கிறிஸ்தவர்கள் இந்த பிரிவினை மார்க்கங்களையும் குழுமங்களையும் கிறிஸ்துவின் சபைகள் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றனர். இது

குருடர்கள் யானையைப் பற்றிக் கருத்துத் தெரிவித்த கதையைத்-தான் நினைவூட்டுகிறது ஆனால் சபை வரலாற்றைப் படிக்கும் போது கிறிஸ்தவத்தில் இன்று நிலவும் பிரிவினைகளால் உண்மைக் கிறிஸ்தவத்துக்கு ஏற்பட்டிருக்கின்ற தலைக்குனிவை அறிந்து வேதனைப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம். இந்த சூழ்நிலையில் நாம் செய்யக் கூடியது என்ன?

1. யூதா நிருபம் மூன்றாம் வசனம் கூறுகிற வண்ணம் பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நாம் தைரியமாகப் போராட வேண்டும். அந்த ஒரே விசுவாசம் மீட்கப்பட்டு, விலகிப் போனதற்கு முன்பு இருந்த நிலைமைக்குக் கொண்டு வரப்படவேண்டும்.

2. தடம்புரண்டு கிடக்கிற சுவிசேஷம் சீர்ப்படுத்தப்பட வேண்டும்.

3. மாந்த ஞானத்தால் கறைபடாத சத்தியம் போதிக்கப்பட வேண்டும்.

4. கள்ளப் போதகங்களின் ஊற்றுக் கண்கள் அடைக்கப்பட வேண்டும்.

5. ஆரோக்கியமான உபதேசங்கள் பறை சாற்றப்பட வேண்டும்.

6. பிரிவினையைத் தகர்த்து ஐக்கியத்தை (Unity; Not Union) உருவாக்க வேண்டும்.

7. அப்போஸ்தலர்களால் உபதேசிக்கப்பட்டு ஆதியில் நிறுவப்பட்ட ஒரே சபையை மீட்டு அமைக்கவேண்டும்.

சுருக்கிக் கூறின் **முதலாம் நூற்றாண்டில் இருந்த தூய புதிய ஏற்பாட்டுச்சபை** மலர்ந்து மணம் பரப்ப வேண்டும். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் அவருடைய நம்முடைய பிதாவும் ஒன்றாயிருப்பது போல கிறிஸ்தவர்களாகிய நாம் அனை-வரும் ஒன்றாயிருந்து, வேதம் விளம்புவதை விவரித்துக் கூறுவோம். வேதம் விளம்பாதவைகளுக்கு உடன்படவேமாட்டோம் என்று சூளுரைத்துச் செயல்படுவோம்.

**ஜிம் மாஸ்சி**

# திரும்பிச் செல்வோம் வாரீர் !

''முதல் முதல் அந்தியோகியாவிலே சீடர்களுக்கு
**கிறிஸ்தவர்கள்** என்கிற பேர் வழங்கிற்று''

—அப்போஸ்தர் நடபடி 11:26

சில ஆண்டுகளுக்கு முன்னர் 'சிறந்த வீட்டு பராமரிப்பு, என்ற அமெரிக்க நாட்டு பத்திரிகை, ''அமெரிக்காவில் மதம்'' என்னும் தலைப்பில் 16 ஆண்டுகளாக ஆய்வு செய்யப்பட்ட ஒரு கட்டுரையை வெளியிட்டது. வித்தியாசமான விநோதமான, மூடநம்பிக்கைகளின் அடிப்படையில் உருவாகிய, சிறிதும் பெரிதுமான 1200 பிரிவுகள் தங்களை கிறிஸ்தவர்கள் எனக்கூறுவதாக அக்கட்டுரை தெரிவித்தது.

மாறுபாடான பல போதனைகளை இன்று கேட்டு வரும் மக்கள் எதை நம்புவது எனத் தெரியாமல் திணறிக் கொண்டிருக்கிறார்கள். எந்த சபை சரியானது அல்லது எல்லா சபைகளுமே ஒன்று தானா? நான் எந்த சபையில் அங்கம் வகிக்கவேண்டும்? ...... என்ற வினாக்கள் எழுகின்றன. காளான்களைப் போல, பிரிவினை சபைகள் பெருகி பலுகி கிடக்கின்ற காரணத்தால் பலர் கிறிஸ்தவத்தையே வெறுத்து ஒதுக்கி விடுகின்றனர் அல்லது ஒதுக்கி வைத்து விடுகின்றனர். கிறிஸ்தவத்தின் வல்லமையும், உலகத்தில் ஒழுக்கமான வாழ்க்கைக்கு அதன் அவசியமும் இன்றைய பிரிவினை சபைகளின் தோற்றத்தால் கவலைக்கிடமான நிலையில் மறைந்து மங்கி வருகின்றன. இந்த பிரிவினைகளின் விலையோ மிக மிக அதிகம். பொறாமை, சந்தேகப்பார்வை, பிரிவுகளுக்கிடையே பரஸ்பர வெறுப்பு. இவற்றிற்கெல்லாம் மேலாக, பிரிவினை சபைகளின் குழப்பமான போதனைகள் லட்சக்கணக்கான மக்களை கிறிஸ்துவின் அருகில் வரவிடாமல் ஓட வைத்துள்ளன.

இந்த நிலை, இதுவரை பலர் கேட்டிராத கேள்விகளைக் கேட்கத் தூண்டுகிறது. இயேசு கிறிஸ்து கட்டிய ஒரே சபையில் மட்டுமே நாம் அங்கம் வகிக்க முடியாதா? அதாவது, பிரிவினை சபைகளின் பாரம்பரிய கொள்கைகளில் சிக்கித் தவிக்காமல், இயேசு கிறிஸ்துவின் உபதேசத்தை மட்டுமே பின்பற்றிச் செல்ல இயலாதா? பெயருக்கு மட்டும் கிறிஸ்தவன் என்று சொல்லிக்கொள்ளுவது தேவையா? பிரிவினையற்ற கிறிஸ்தவம் அடைய முடியாத ஒன்றா? அல்லது, கிறிஸ்துவின் ஒரே சபை நடைமுறைக்கு வராத கனவா? என்பவைகள் அவைகளில் சில.

மத உலகிலே இன்று நிலைத்துள்ள பிரிவினை சபைகளின் வரலாறுகளை, சிறிது பின் நோக்கி பார்க்க வேண்டிய தருணம் இதோ வந்து விட்டது. இந்த சபைகள் எல்லாம் எங்கிருந்து, எப்பொழுது யாரால் ஏன் வந்தன? இவ்வளவு மோசமாக நாம் பிரிந்து கிடப்பது எப்படி? தேவனுக்கு இந்நிலை மகிழ்ச்சி தரக் கூடியதா? புற மதஸ்தர்கள் நம்மைப்பற்றி என்ன நினைக்கிறார்கள்? கிறிஸ்துவை பின்பற்றுவோர் எல்லாரும் ஒன்றுபட்டு ஒரே சபையாக இயங்க வழியே கிடையாதா? எல்லாவற்றிற்கும் மேலாக தொழுதிட, பிரிவினை லேபிள் எதுவும் இல்லாத "கிறிஸ்தவனாக" மட்டுமே இருப்பது எப்படி? இக்கேள்விகளுக்கெல்லாம் இங்கு விடை காணப்போகிறோம்.

**புதிய ஏற்பாட்டு காலத்தில் ஒரே ஒரு சபை மட்டுமே இருந்தது.**

புதிய ஏற்பாட்டு நிலை பற்றி அப்போஸ்தலனாகிய பவுல், எபேசியர் 4:4-6 வசனங்களில் கீழ்க் கண்டவாறு கூறுகிறார்.

'உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே **சரீரமும்**, ஒரே ஆவியும் உண்டு. ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானம், எல்லோருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு; அவர் எல்லோர் மேலும், எல்லோரோடும் உங்கள் எல்லோர்க்குள்ளும் இருக்கிறவர்.'

ஒரே சரீரம் என பவுல் இங்கு குறிப்பிடுவது சபையை நினைவில் கொண்டு தான் என்பதை, அடுத்து எபேசியருக்கு எழுதிய நிருபம் 1:22-23 வசனங்களில் காணலாம். அதாவது,

"எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி, எல்லாவற்றையும், எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய **சரீரமான சபைக்கு** அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்" அந்த சரீரமாகிய ஒரே சபையில் அங்கத்தினர்கள் **கிறிஸ்தவர்கள்** என்று மட்டுமே அழைக்கப்பட்டனர் என்பதை அப்போஸ்தலர் நடபடி 11-26ம் வசனத்தில் காணலாம்.

இயேசு கிறிஸ்துவின் விருப்பம், எல்லா மக்களும் ஒன்றுபட்டிருக்க வேண்டும் என்பதே. தன்னுடைய சபையைக் கட்டுவதாக அவர் கூறிய போது, ஒரே சபையைத் தான் கூறினார். மத்தேயு 16:18ம் வசனத்தை வாசித்துப் பாருங்கள். சபையை என்று ஒருமையில் சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். மேலும், இயேசு கிறிஸ்து சபையை தம்முடைய சொந்த இரத்தத்தை சிந்தி

சம்பாதித்துக் கொண்டார் என அப்போஸ்தலர் நடபடி 20:28-ல் கூறப்பட்டுள்ளது. மகிமையுள்ள சபையாக அதை நமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கு தம்மைத் தாமே அதற்கு ஒப்புக்கொடுத்தார் என எபேசியர் 5:26,27 வசனங்களில் காணலாம். பவுல் ரோமாபுரியிலுள்ள சபையாருக்கு எழுதுகிறபொழுது 'கிறிஸ்துவின் சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள்' என ரோமர் 16:16ல் கூறியுள்ளார். எனவே கிறிஸ்து ஒரே சபையைக் கட்டினார் அது **கிறிஸ்துவின்சபை** என தெளிவாகக் கூறப்பட்டுள்ளது

அவருடைய சீடர்களின்ஒற்றுமைக்காகவும். அவருடைய உபதேசங்களை ஏற்றுக்கொள்கிறவர்கள் எல்லோரும் ஒன்றாகஇருக்கும்படியாகவும் இயேசு கெத்செமென தோட்டத்தில் மனதுருகி ஜெபித்தார். யோவான் 17:20,21ம் வசனங்களைப் பாருங்கள்: ''அவர்களெல்லோரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல, அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும், வேண்டிக்கொள்ளுகிறேன்'' என ஜெபித்தார். எபேசியர் 2:13-16 வசனங்களிலும் ஒரே சரீரமாகிய சபையைப் பற்றி பவுல் குறிப்பிடுகிறார்.

பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு, புதிய ஏற்பாட்டை எழுதிய எல்லோருமே பிரிவினையை கடுமையாகக் கண்டித்திருக்கின்றனர். 1 கொரிந்தியர் 1:10ம் வசனத்தில் பவுல் கூறுகிறார். ''சகோதரர்களே நீங்களெல்லோரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏக மனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாய் சீர் பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடையே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, உங்களுக்கு புத்தி சொல்லுகிறேன்,'' கலாத்தியர் 5:20 ம் வசனத்தில், பிரிவினையானது மாம்சத்தின் கிரியை என தேவனின் வார்த்தை கண்டிக்கிறது. 2 பேதுரு 2:1ம் வசனத்தில், கேட்டுக் கேதுவான வேதப் புரட்டுகளை, தந்திரமாய் நுழையப்பண்ணி தங்களை கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்கு தீவிரமான அழிவை வருவித்துக் கொள்ளும் கள்ள தீர்க்கதரிசிகளைப் பற்றி குறிப்பிடுகிறார்.

1. புதிய ஏற்பாட்டின்படி, சபை ஒன்றே என்பது தெளிவாகத் தெரிவதால் எல்லா பிரிவினை சபைகளும் கண்டிக்கத்தக்கவை.

2. எல்லா 'சபைகளும் ஒன்றே' என்ற கூற்று தவறானது.

3. ''விருப்பமான ஏதாவது ஒரு சபைக்குப் போகலாம்'' என் ஒருவர் சொல்வது, ஒன்று தவறான போதனையின் விளைவாக இருக்கலாம் அல்லது அவர் தேவனின் விருப்பத்தைப் பற்றி சிறிதும் கவலையற்ற நபராக இருக்கலாம்.

4. உண்மையான சபை ஒன்றே என்பது உறுதியான பின், மற்ற சபைப் பிரிவுகள் எல்லாம் போலிகள் என்பது சிந்திக்க விரும்புகிற ஒருவருக்கு விளங்காமற் போகாது.

5. புதிய ஏற்பாட்டு சபை ஒன்றே என்பதால், இரட்சிக்கப்பட வேண்டும் என்ற பாரம் உள்ள எல்லோரும் அதில் தானே அங்கம் வகிக்க வேண்டும்?

எவ்வித விரோத மனப்பான்மையோ, அல்லது வெறுப்பு உணர்வோ இன்றி, உங்கள் பேரில் அன்பும் அக்கரையும் கொண்டு, புதிய ஏற்பாட்டில் காணப்படும் சபையைப் பற்றி நான் கூறுவதை, தயவுசெய்து வேதகாமத்துடன் ஒத்துப் பார்த்து சரியாக இருப்பின் ஏற்றுக்கொள்ளுங்கள், அப் 17:11, அது பிரிவினையற்ற கிறிஸ்துவை நடு நாயகராகக் கொண்ட தேவனின் அநாதித் தீர்மானங்களின் நிறைவேற்றலாக ஒரே சிந்தையாய் ஆணும் பெண்ணும் சகோதரத்துவ பாசத்தில் இணைந்த ஒரு அற்புதமான தெய்வீக அமைப்பு என்பதை நீங்கள் காண முடியும்.

**பிரிவினை சபைகள் வளர்ந்த வரலாறு உங்களுக்குத் தெரியுமா?**

இன்றைய மதப்பிரிவினைகள் வேர் விட்டு வளரத் தொடங்கிய காலத்தை, வரலாற்று ஆசிரியர்கள் **பெரும் வீழ்ச்சியின் காலம்**, அல்லது **இருண்ட காலம்** என குறிப்பிடுகின்றார். புதிய ஏற்பாட்டு காலத்திலேயே, சபையை துண்டாட சிலர் முயன்றனர். இதை பவுல் வன்மையாகக் கண்டித்து உணர்த்தினார். (1 கொரி 1:10-17), அப்போஸ்தலர்களும், பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு, புதிய ஏற்பாட்டை எழுதியவர்களும், இதை கண்டித்துள்ளனர். கலாத்தியர் 1:6-9 வசனங்களிலும், 2 பேதுரு 2:1ம் வசனத்திலும் எச்சரித்துள்ளனர். 2 தீமோத்தேயு 2:18-ம் வசன இறுதியில், அப்போஸ்தலர் பவுல் மீண்டுமாக எச்சரிக்கிறார்.

''...... இவர்கள் உண்மையைவிட்டு விலகி சிலருடைய விசுவாசத்தையே தகர்த்து விடுகிறார்கள். தொடர்ந்து 2 திமோத்தேயு 4:3,4 வசனங்களில் கூறுகிறார். ''ஒரு காலம் வரும், அப்போது மக்கள் நலமிக்க போதனையைத் தாங்க மாட்டார்கள், மாறாக செவித்தினவு கொண்டவர்களாய்த் தங்கள் மனம் போன போக்கிலே எண்ணிறந்த போதகர்களைத் திரட்டிக் கொள்வர்,

உண்மைக்குச் செவி கொடுக்க மறுத்து, கட்டுக் கதைகளுக்கு செவி கொடுப்பர்''. (திருத்திய மொழி பெயர்ப்பு)

எபேசுவிலுள்ள புதிய ஏற்பாட்டு சபையை எச்சரித்து, அப்போஸ்தலர் நடபடி 20:20-30 வசனங்களில் பவுல் கூறுகிறார் ''நான் போனபின்பு மந்தையை தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும். உங்களிலும் சிலர் எழும்பி, சீடர்களை தங்களிடத்தில் இழுத்துக் கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன்''.

மாறுபாடான போதனைகளும், வீழ்ச்சியும், பவுல் கூறியவாறு, கி.பி. 100 முதல் 300 வரையிலான கால கட்டத்தில் தோன்றி, புதிய ஏற்பாட்டின் முக்கியத்துவத்தை சிறிது சிறிதாக மங்கச் செய்து விட்டன. மாறுபாடான போதனைகள் தந்திரமாக ஒவ்வொரு கட்டத்திலும் புகுத்தப்பட்டு வந்தன.

1. புதிய ஏற்பாட்டுக் கால எளிய சுதந்திரமான, சபை **நிர்வாக முறை** கொஞ்சம் கொஞ்சமாக, பிஷப், ஆர்ச்பிஷப், என்றும் கடைசியாக 7-வது நூற்றுண்டு துவக்கமுதல் ''போப்'' என்று மனிதனால் உருவாக்கப்பட்ட பதவிகளால் மாற்றப்பட்டு இறுதியில் பறித்துக் கொள்ளப்பட்டன.

2. மனிதனுடைய பாரம்பரியங்கள், தேவனின் வார்த்தைக்கு மேலாக மதிக்கப்பட்டு, மனித ஞானத்தால் உருவாக்கப்பட்ட திட்டங்கள் புகுத்தப்பட்டன.

3 புதிய ஏற்பாட்டு சபையின் எளிய வழிபாட்டு முறைகள் மாற்றப்மட்டு, மனிதன் ஏற்படுத்திய சடங்குகளுடன் இலத்தீன் மொழியில் பூசை (MASS),என்ற பெயரில் விக்கிரகங்களை வணங்குதல், ஆராதனையில் வாத்திய இசைக்கருவிகள் போன்றவைகள் இடம் பெற்றன.

4. ஜென்ம பாவம் என்ற ஒரு கொள்கையை உருவாக்கி, குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் என்ற புதுமுறை புகுத்தப்பட்டு தண்ணிரைத் தெளித்து, சபை அங்கத்தினர்களாக்கும் முறையில் தவறுன மாற்றம் செய்யப்பட்டது.

5. போதகர்கள் தங்களை ''சங்கைக்குரிய'' அதி சங்கைக்குரிய'' என்றெல்லாம் அடைமொழிகளை சேர்த்து பெருமையுடன் அழைத்துக் கொண்டதுடன், சபை அங்கத்தினர்களிடமிருந்து தங்களை வித்தியாசப்படுத்திக்காட்டும் ஆடைகளையும் அணிந்து கொண்டனர்.

படிப்படியாக நடைபெற்று வந்த இந்த மாபெரும் வீழ்ச்சியை ஆண்டுவாரியாகக் கீழே காணலாம்.

கி.பி. 150-ல் தலைமை பிஷப் தோன்றினர்;
கி.பி. 251-ல் தண்ணீர் தெளித்து ஞானஸ்நானம் அறிமுகம்;
கி.பி. 405-ல் விக்கிர வழிபாடு புகுத்தப்பட்டது;
கி. பி. 607-ல் முதல் போப் ஏற்படுத்தப்பட்டார்.

அதாவது, ரோமன் கத்தோலிக்க மதம் தோன்றியது. அவர்கள் முதலாம் நூற்றுண்டில் மரித்த, இராயப்பர் என கத்தோலிக்கர்களால் அழைக்கப்படும் பேதுருவை முதலாவது போப் என சொல்வது எவ்வளவு பெரிய சரித்திர மோசடி என்பதைக் காணலாம். 'போப்' திருமணம் செய்து கொள்வது கூடாது என்று போதிக்கும் இவர்கள் திருமணமாகி குடும்பம் நடத்திய பேதுருவை "முதலாவது போப்" என்று கூறிக் கொள்வது எப்படி? (மத் 8:14, மாற்கு 1-30 லூக் 4:38; 1கொரி9:5)

கி. பி. 666-ல் ஆராதனையில் வாத்தியக் கருவுகளை அறிமுகம் செய்தனர்;

6. கி. பி. 800-ல் சபையும் (அதாவது கத்தோலிக்க சபையும்) இணைந்து வேதத்துக்குப் புறம்பாக செயல்பட்டன. மதத்தின் பெயரால் இவர்கள் நடத்திய கொடுங்கோலாட்சியையும் செய்த பித்தலாட்டங்களையும் அம்பலப்படுத்தி, புதிய ஏற்பாட்டுநடைமுறைகளுக்குத் திரும்பும் அவசியம் பற்றி மக்கள்மன்றத்தில் தைரியமாக எடுத்துரைத்த பலர் சித்திரவதைக் குட்படுத்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர்.

7. கி. பி. 1054-ல் கிரீக், ரோமன் சபைகள் என்று சுத்தோலிக் மார்க்கத்தார்களிடையே பிளவு ஏற்பட்டு பிரிந்தனர்.

அடுத்து வந்த நூற்றுண்டுகளில் மேலும் பிரிவுகள் ஏற்பட்டு மாறுபாடான வழிபாட்டு முறைகளும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, கிறிஸ்தவம் வீழ்ச்சியடைந்து, உலக காரியங்களும் ஊழல்களும் மலிந்த மதஅமைப்புகள் தோன்றலாயின.

சாத்தான் தனது (தற்காலிக) வெற்றியைக் கண்டு குதித்து கூத்தாடி இருப்பான்!

16-ஆம் நூற்றாண்டில், மேற்சொன்ன கேடுகளைக் களைந்தெரிந்து, புதிய ஏற்பாட்டு சபைக்கு மீண்டும் செல்ல ஜான்வைகிளிப், ஜான்ஹஸ், ஜெரோம் போன்ரோர் கிளர்ந்தெழுந்தனர். மதமும் அரசும் இணைந்து வலிமை மிக்க சக்தியாக இயங்கிய அந்த காலகட்டத்தில், "ஆதிசபையின் ஒழுங்குகளிலிருந்து பிரிந்து எங்கோ

வந்துவிட்ட நாம், மீண்டுமாக திரும்பிச் செல்லுவோம்'' எனக் குரல் எழுப்பி அறைகூவல் விட்ட, மேற்சொன்ன கிறிஸ்துவின் உண்மையுள்ள ஊழியர்கள், அந்தோ! தங்கள் உயிரையே இழக்க-வேண்டி வந்தது.

பிற்காலத்தில் தோன்றிய **மார்ட்டின் லூதர்**, ''மதத் தலை-வர்களின் தடைகள் இன்றி, எல்லோரும் பரிசுத்த வேதாகமத்தைப் படித்து, அதன்வழி நடக்க வேண்டும்'' என்று வற்புறுத்தினர்.

அவரை தொடர்ந்து பல நூற்றுண்டுகளாக, மாறுபாடான' மனிதக் கோட்பாடுகளால் அமுங்கிக் கிடந்த புதிய ஏற்பாட்டுச் சபைக்கு, மீண்டுமாக உயிர்கொடுக்க ஒரு இயக்கம் தோன்றிற்று. இவ்வியக்கத்தில் **உல்ரிச் ஸ்விங்லி ஜான்கால்வின், ஜான், நாக்ஸ்** போன்ருேர் தீவிரப் பங்கேற்றனர். இவர்களுக்குப் பின் தோன்றிய **ஜான்வெஸ்லி**, மனிதர்கள் கடைபிடித்து வந்த உயி-ரற்ற சடங்குகளை மாற்றி, புதிய ஏற்பாட்டு சபைக்கு உயிரூட்ட முயன்றனர்.

இவர்கள் எல்லோருமே மரியாதைக்குரிய பெரிய மனிதர்கள். நாம் இவர்களுக்கு மிகவும் கடன்பட்டுள்ளோம். இருண்ட காலத்தில் ஒளியேற்ற பாடுபட்ட இவர்களை நாம் வாழ்த்துகிருேம்! ஆனால் பரிதாபம்! காலத்தின் கட்டயத்தாலும் சூழ்நிலையாலும் இதற்கு மேல் இவர்களால் செல்ல முடியவில்லை. காலப்போக்கில் மீண்டும் புதிய புதிய மனித சபை பிரிவுகள் உருவாக இந்த நல்ல மனிதர்களின் பெயர்களே பயன் படுத்தப்பட்டன என்பதுதான் வேதனையைத் தருகிறது. இவர்களில் எவருமே புதிய பிரிவுகளை ஏற்படுத்தும் நோக்கில் ஆரம்பத்தில் இயங்கவில்லை. பிரிவினை சபைக்கு உதவும் எண்ணமும் இவர்களிடம் கிஞ்சித்தும் கிடையாது ஆனால் துரதிஷ்டமாக இவர்களுனடய மரணத்துக்குப் பிறகு இவர்களுக்கு மரியாதை செலுத்துகிறதாக நினைத்துக் கொண்டு இவர்களுடைய ஆதரவாளர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுவதை விட்டு விட்டு, மேலே குறிப்பிட்ட மனிதர்களை பின்பற்றலாயினர். இப்படியாக புதுப் புது பிரிவு சபைகள் தோன்றலாயின. **மார்ட்டின் லூதரைப்** பின்பற்றியதர்கள் **லூதரன் சபை** என்றும். **கால்வின்** கருத்துக்களால் கவரவப்பட்டவர்கள். **பாப்டிஸ்ட் சபை** என்றும். **ஜான்நாகஸ்** வழியாக **பிரஸ்பிடேரியன் சபையும், ஜான் வெஸ்லியின்** ஆதரவாளர்கள் **மெதடிஸ்ட்க் சபை** எனவும், இங்கிலாந்து நாட்டில்' இவ்வியக்கம் **ஆங்கில சபை** என்றும் பல பிரிவுகளாக பிரிந்தன.

காலம் செல்லச் செல்ல இப்பிரிவுகளில் உட்பிரிவுகள் பல முளைத்து அவைகளிலும் பிளவுகள் ஏற்பட்டு. இன்றைய தினம்

அமெரிக்காவில் மட்டும் 1200 பிரிவுகள் உள்ளன இந்தியாவிலும், உலகமெங்கிலும் எண்ணிலடங்கா பிரிவு (அல்லது பிளவு) சபைகள் உள்ளன. இவ்வாறாக ஆதிசபையை உயிர்ப்பிக்கும் இயக்கம் ஸ்தம்பித்துப் போனது மட்டுமில்லாமல் கிறிஸ்துவம் பல கூறுகளாக சிதைந்து ஒன்றுக்கொன்று இணக்கமில்லாமல் முரண்பாடாகச் செயல்பட ஆரம்பித்தன. சாத்தான் மீண்டுமாக தன் எக்காளச் சிரிப்பிரில் மிதந்திருப்பான்!

மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட சனப பிரிவுகளுக்கிடையே வெடித்த பொறாமை, வெறுப்பு, அடிதடி, சட்டப் பிரசனை-களின் விளைவாகத் தோன்றிய ஏமாற்றத்தின் உச்ச கட்டத்தில், கடந்த நூற்றாண்டின் துவக்கத்தில் அமெரிக்காவில் ஒரு மாபெரும் மறு மறுமலர்ச்சி இயக்கம் உதயமாயிற்று.

சபை பிரிவுகளை ஒழித்துக் கட்டும் மார்க்கம், என்பது மீண்டும் ஒரு புதிய பிரிவை ஏற்படுத்துவது அல்ல என்றும் மாறுக, மனிதரால் உருவாக்கப்பட்டு, சபைகள் என்ற பெயரில் இயங்கும் அமைப்புகள் அனைத்தையும் முற்றிலும் புறக்கணித்து விட்டு, புதிய ஏற்பாட்டு சபைக்குத் திரும்புவது தான் ஒரே சரியான வழி என இந்த இயக்கம் ஏற்றுக்கொண்டு, **முதலாம் நூற்றாண்டு புதிய ஏற்பாட்டு சபையின்** சகல மகிமைகளையும், பூரணமான பரி-சுத்தத்தையும் மீண்டுந் கொண்டுவரப் பாடுபட்டனர். இவ்வியக்கம் எல்லைப் பகுதிகளான விர்ஜினியா, கெண்டுக்கி, ஒகியோ, பென்ஸில் வேனியா போன்ற இடங்களில் விரைவாகப் பரவிற்று.

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை அதாவது, **கிறிஸ்துவின் சபையை** மீண்டும் ஏற்படுத்தும் பணியில் பல பிரிவு சபைகளின் தலைவர்களும் தங்கள் தங்கள் பிரிவுசுளை உதறிவிட்டு, உற்சாக-மாகப் பங்கேற்றனர்.

இதுவரை ஆணவச் சிரிப்புச் சிரித்துக்கொண்டிருந்த நமது ''நண்பன்'' சாத்தான் இவ்வியக்கத்தின் வலிமைகண்டு தொடை நடுங்கிப் போயிருப்பான்.

வட காராவினாவில் **மெதடிஸ்ட்** சபையின் புகழ் பெற்ற ஊழியாரய் இருந்த **ஜேம்ஸ் ஒ கெல்லி** என்பவர், 1793-ல் மெதடிஸ்ட் சபையை உதறி தள்ளிவிட்டு புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தைக் கொண்டுவர உழைத்தார். இவருடைய முயற்-சியால் 5000 பேருக்கும் அதிகமான சகேகதரர்கள் தங்களைக் **கிறிஸ்தவர்கள்** என்று மட்டுமே அழைக்கவும், **புதிய ஏற்பாட்டு உபதேசச் சட்டங்களை** மட்டுமே தங்கள் சபையில் சட்ட திட்டமாகவும் ஏற்றுக்கொண்டனர்.

1801-ம் ஆண்டு துவக்கத்தில், புதிய இங்கிலாந்தில் **எலியாஸ்மித், அப்னார் ஜோன்ஸ்** என்ற இரு பாப்டிஸ்ட் போதகர்கள் தங்கள் பிரிவினை சபையை உதறிவிட்டு கிறிஸ்துவின் சரீரமாகிய ஒரே சபைக்காக வேலை செய்யத் தொடங்கினார்கள்.

கென்டுக்கி மாநிலத்தில், **பார்ட்டன் ஸ்டோன்** என்ற பிரஸ்பிட்டேரியன் போதகர், அதே சபையைச் சேர்ந்த மற்றும் சில போதகர்களுடன் இணைந்து **ஸ்பிரிங்பீல்ட் பிரஸ்பிட்டேரியன்** சபையை விட்டு வெளியேறி, ''வேதாகமத்தை தவிர வேறு மனித சட்டதிட்டங்களோ, அல்லது கிறிஸ்தவன் என்ற பெயரைத் தவிர வேறு எந்த அடைமொழியுமோ நமக்குக் கூடாது'' என அறிவித்து, புதிய ஏற்பாட்டு சபையை மீண்டும் கொண்டுவரும் பணியில் தங்களை அர்ப்பணித்தார்கள்.

**ஸ்பிரிங்பீல்ட் பிரஸ்பிட்டேரியன்** சபையின் கடைசி உயில் என அவர்கள் வெளியிட்ட ஒரு பிரபலமான தஸ்தாவேஜு அறிவிப்பதைக் கேளுங்கள்.

''இந்த சபை (ஸ்பிரிங்பீல்டு பிரஸ்பிட்டேரியன்) மடிந்து-யோகவும், கலைக்கப்பட்டு, கிறிஸ்துவின் சபையிலே இணையவும் நாங்கள் தீர்மானிக்கிறோம். ஏனென்றால், நாம் ஒரே நம்பிக்கையில் அழைக்கப்பட்டிருப்பது போல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் தான் உண்டு. மோட்சம் செல்ல, தங்களின் ஒரே மார்க்கமாக மக்கள் இனி கிறிஸ்துவின் நற்செய்தியை (வேதாகமத்தை) மட்டுமே, ஏற்றுக் கொள்ள நாங்கள் தீர்மானிக்கிறோம். கிறிஸ்துவின் நற்செய்திக்குப் போட்டியாக முளைத்த இதர எல்லா மனித சட்டதிட்டங்களையும், விரும்பினால், தியிலிட்டுக் கொளுத்துவோம். மனிதன் இயற்றிய பல மதச்சடங்குகள், சட்டபுத்தகங்கள் வழியாக நரகத்திற்கு செல்வதை விட்டு, ஒரே வேதாகமத்தை மட்டும் நமது இரட்சிப்புக்கு ஏற்றுக்கொள்வோம்''.

இவ்வெழுச்சி காரணமாக விரைவிலேய ஆயிரக்கணக்கான மக்கள் மனித சபை பிரிவுகளை உதறிவிட்டு, **பார்ட்டன் ஸ்டோன்** அவர்களைப் பின்பற்றி, கிறிஸ்தவர்கள் ஆனார்கள்.

மறுமலர்ச்சி இயக்கத்தில் வெகு முக்கியமான நபர்கள் **தாமஸ் கேம்பல் அலெக்ஸாண்டர் கேம்பல்** ஆகிய இருவர். இவர்கள் தகப்பனும் மகனும் ஆவர். அயர்லாந்து நாட்டிலிருந்து இவர்கள் 1807, 1809-ம் ஆண்டுகளில் குடிபெயர்ந்து அமெரிக்-காவுக்கு வந்தனர். அவர்கள் வெளியிட்ட அறிக்கையின் இறுதிப் பகுதி மிகப் பிரசித்திபெற்ற ஒன்றாகும். அதாவது: **''வேதாகமம் எதைப் பேசுகிறதோ அதை மட்டுமே பேசுவோம்; அது பேசாத எதையும் நாம் பேசமாட்டோம்''.**

பிரஸ்பிட்டேரியன் சபை, பின்னர் பாப்டிஸ்ட் சபைகளில் அங்கம் வகித்த இவ்விருவரும், சத்தியத்தை தேடி உணர்ந்தபின் மேற்சொன்ன சபைப்பிரிவுகளை உதறி தள்ளிவிட்டு, கிறிஸ்துவின் ஒரே சபையாகிய புதிய ஏற்பாட்டு சபையில் தங்களை இணைத்துக் கொண்டனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் இவர்களைப் பின்பற்றி கிறிஸ்துவின் சபையில் இணைய இவர்கள் காரணமாக இருந்தனர்.

ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல், பல இடங்களிலும் தோன்றிய இந்த மறுமலர்ச்சி இயக்கம் 1832-ம் ஆண்டு துவக்கத்தில் ஒருங்கிணைந்து, புதிய ஏற்பாட்டு சபைக்குத் திரும்பும் இயக்கமாக செயல்பட்டது.

1. ''ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக் கடவன்'' என 1 பேதுரு 4:11 ம் வசனத்தில் கூறியுள்ளபடி, கிறிஸ்துவில் நம்பிக்கையுடைய எல்லோரின் ஒற்றுமையை வலுயுறுத்தினர்.
2. வேதாகமத்தை மட்டுமே சபையின் சட்ட புத்தகமாக வைத்துக் கொண்டு, மனிதன் உருவாக்கிய சகல சபை சட்டதிட்டங்களையும் புறக்கணித்தனர்.
3. வேதாகமத்தில் குறிப்பிட்ட பெயர்களை மட்டுமே சபைக்கு உபயோகித்து, உண்மை கிறிஸ்தவர்களாக செயல்பட உறுதி பூண்டனர்.
4. புதிய ஏற்பாட்டு சபையில் நடைமுறையிலிருந்த வழிபாட்டு முறைக்குத்திரும்பினர்.

புதிய ஏற்பாட்டு சபையில் தொடர்ந்த ஒரு ஒழுங்கு இருந்ததை ஏற்றுக்கொண்டு, புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்துக்கு திரும்புவதில் கவனத்தையும் ஒழுங்கையும் கடைபிடித்தனர்.

**முன்னேற ஒரே வழி பின்னே செல்வது தான்;** அதாவது ஆதி சபையைப் போல இருப்பதுதான் என அவர்கள் நம்பினார்கள்.

இன்று நாம் கிறிஸ்தவர்களாக மட்டுமே இருக்கமுடியும் என்பதில் பூரண நம்பிக்கை கொண்டுள்ளோம். வேதாகமத்தை மட்டுமே மூலமாக எடுத்துக் கொண்டு, சிதறிக்கிடக்கும் பிரிவினைக் கூட்டங்கள் தங்கள் கொள்கைகளை விட்டு ஒன்றுபட வேண்டுகிறோம். மத பிரிவினைகளை நோக்கி எங்கள் மன்றாட்டு இதோ-

தயவு செய்து உங்கள் நிலையை மறு பரிசீலனை செய்யுங்கள். உங்கள் நம்பிக்கை, பழக்க வழக்கங்களை மாற்றி வேதாகமம்

பேசும் இடத்தில் பேசுங்கள்; அது பேசாததை நீங்களும் பேசாதீர்கள்..

**அலெக்சாண்டர் காம்பெல்** அல்லது **பார்ட்டன் ஸ்டோன்** அல்லது **ஜான்வெஸ்லி**, அல்லது **மார்ட்டின் லூதர்** அல்லது **கால்வின்** அல்லது எந்த மனிதனையாவது பின்பற்றுங்கள் என நாங்கள் சொல்லவில்லை. மாறாக, உங்களை வேண்டுவதெல்லாம்: **கிறிஸ்துவிடம் திரும்புங்கள்! அவருடைய வார்த்தையை மட்டுமே பின்பற்றுங்கள்! புதிய ஏற்பாட்டு சபையாகிய கிறிஸ்துவின் சபைக்குத் திரும்புங்கள்!** நமது பழக்கங்களிலும், நம்பிக்கையிலும் நாம் பிரிவினை சபையாக இருக்கக்கூடாது என்பதே எங்கள் ஜெபம்!

இது ஒன்று மட்டுமேதான் மக உலகில் ஒற்றுமைக்கான வழி. அன்று இது சாத்தியமாயிற்று; அப்படியானால் இன்றும் அது சாத்தியமே.

கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்துள்ளவர்கள் எல்லோரும் ஆதிச்சபைகள் முதலாம் நூற்றாண்டில் நடந்ததைப் போல, கிறிஸ்துவின் வழியில் நடக்கவேண்டும் என்பதே எங்கள் வேண்டுதலும் ஜெபமுமாகும்.

முதலாம் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள் எவ்வாறு இருந்தார்களோ, அதேபோல 20-ம் நூற்றாண்டிலும் நாம் இருக்க முடியும்- அவர்கள் நம்பியதை நாம் நம்பினால் அவர்கள் கீழ்ப்படிந்ததைப் போல நாமும் நடந்தால், கிறிஸ்துவின் சபையிலே நாம் அங்கம் வகிப்போம்.

நாம் முன்னறே, பின்னோக்கிச் செல்வோம்...... ஆம் முதல் நூற்றாண்டு **கிறிஸ்துவின் சபையை** நோக்கிச் செல்வோம்.

இயேசு கிறிஸ்து கட்டிய சபை:- **கிறிஸ்துவின் சபை** அதன் உறுப்பினர்கள் – **கிறிஸ்தவர்கள்** கிறிஸ்தவர்களின் ஒரே முழுமையான சட்ட நூல், எல்லா சூழ்நிலைகளுக்கும் போதுமான சட்ட நூல் **புதிய ஏற்பாடு**.

**ராபர்ட் ஜி: டாக்கரி**

**எஸ். எஸ். ராஜன்**

# சபை வளர்ச்சியில் பெண்களின் பங்கு

சபைகளில், மற்ற பிரிவினைக் கூட்டங்களில் பெண்களுக்கு, ஆண்களுக்குச் சமமாக ஏராளமான வாய்ப்புகள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் கர்த்தருடைய சபையில் பெண்களுக்கு அப்படி இல்லையே என்று சில சகோதரிகள் அங்கலாய்ப்பதை நாம் பார்க்கிறோம். வேதாகமம் பெண்களின் உரிமைகளை மறுக்கிறது என்று கூறுவது நியாயம் ஆகாது. அப்படிச் செய்வது தேவனுடைய அநந்த ஞானத்தைக் குறை கூறுவதாக அமையும். பெண்களுடைய பலமும் பலவீனமும் அவர்களைப் படைத்த தேவனைவிட அதிகமாகத் தெரிந்தவர்கள் யார் இருக்கமுடியும்? ஆகவே அப்படிப்பட்ட தவறான சிந்தனைகளை அகற்றி விட்டு பெண்கள் சபை வளர்ச்சிக்கு வேதாகமம் கூறுவதற்கு உட்பட்டு எவ்வாறு உதவலாம் என்று தேவ ஆலோசனைகளைத் தேடி வாசிப்போம்.

சொல்லப்போனால் சபையின் ஆராதனை நேரம், வேத ஆய்வு போன்ற நிகழ்ச்சி நேரங்கள் எல்லாம் வாரத்தின் இதர நாட்களில் செய்யப்படவேண்டிய வேலைகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் மிகமிகச் சொற்பமே, அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் பேச வேண்டும், மேடையேற வேண்டும் என்ற துடிப்பு, கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்று எண்ணத்தைக் காட்டிலும் தான் ஒரு முக்கியஸ்தர் என்று விளம்பரத்திக் கொள்வதற்கே பயன்படும். ஆகவே சகோதரிகளே! என்னோடு சேர்ந்து உங்கள் வேதாகமங்களைப் படியுங்கள். தேவ ஆலோசனைகளை மீறாமல் அவருடைய பணிகளைச் செய்த கண்ணியமுள்ள சகோதரிகளை உங்களுக்கு அடையாளம் காட்டுகிறேன்.

தொழுகையும், ஊழியமும் ஒன்றல்ல, தொழுகை நேரம் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் கிடைக்கிற சிலாக்கியம். அதை ஒரு ஊழியம் என்றோ சேவை என்றோ கூறக் கூடாது. தொழுகை கடவுளைத் துதித்து மகிழ்வதற்காக ஒரு வாய்ப்பு. தொழுகையின் மூலமாகவும், வேத ஆய்வுகளின் மூலமாகவும், நம்முடைய ஆவிக்குரிய ஆகாரத்தைப் பெற்றும், ஒருவருக்கொருவர் ஐக்கியம் கொண்டும் பலம் அடைகிறோம். அந்த பலத்தைக்கொண்டு வாரத்தின் மற்ற நாட்களில் தேவனுக்கடுத்த பணிகள், ஊழியங்கள் ஆகியவற்றைச் செய்து ஆண்டவருக்கு மகிமை உண்டாக்கலாம்.

''ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து அமைதலோடு கற்றுக்கொள்ளக்கடவள். உபதேசம் பண்ணவும், புருஷன்மேல் அதிகாரம் செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை, அவர்கள் அமைதியாக இருக்கவேண்டும்'' 1 தீமோ 2;11,12. சபைகளில் உங்கள் ஸ்திரீகள்

பேசாமலிருக்கக் கடவர்கள் பேசும்படி அவர்களுக்கு உத்திரவில்லை, அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும் வேதமும் அப்படியே சொல்லு-கிறது. அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக்கொள்ள விரும்பினால் வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக் கடவர்கள். ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே'' (1 கொரி 14 : 3, 4,35).இந்த வசனங்களின் மூலமாக பெண்மைக்கு அடக்கமே சிறந்த அணிகலன் என்று பவுல் ஆவியானவர் மூலமாக எழுதுகிறார், அதைமீறி ஒருவர் செயல்பட்டால் அது தேவ ஆலோசனை மீறல் குற்றமாகும்.

பிலிப்பியர் நிருபம் 4:3ல், அன்றியும் என் உத்தமக் கூட்டாளியே, அவர்களுக்கு (கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்கிற எயோதியாளுக்கும் சிந்திக்கேயாளுக்கும்) உதவியாக இருக்கும்படி உன்னையும் வேண்டிக் கொள்கிறேன். அவர்கள் கிலமந்தோடும் மற்ற என் உடன் சகோதரர்களோடும் கூட சுவிசேஷ விஷயத்தில் என்னோடு கூட மிகவும் பிரயாசப்பட்டார்கள் என்று பாராட்டி எழுதுகிறார். மேலே குறிப்பிடப்பட்டுள்ள சகோதரிகள் மேடை-யேறி பிரசங்கித்து தேவ ஆலோசனைகளை மீறாமல் ஊழியத்தில் பங்கு பெற்று பாராட்டும் பெற்றிருக்கிறார்கள்.

ரோமர் நிருபம் 16:1,2 ஆகிய வசனங்களில் ''கெங்கிரேயா ஊர்சபைக்கு ஊழியக்காரியாகிய (பிரசங்கியாக அல்ல) நம்முடைய சகோதரியாகிய பெபேயாளை ...அவள் அநேகருக்கும் எனக்கும் கூட ஆதரவாக இருந்தவள் என்கிறார் பவுல். ஊழியங்களைத் தாங்கி ஆதரிப்பது மேடைப் பிரசங்கமாக இருந்திருக்காது என்று நம்பலாம்.

அடுத்து ஆக்கிலாவையும் பிரிஸ்கில்லாளையும் பார்ப்போம், அவர்களை பவுல் உடன் வேலையாட்கள் என்றும், பவுலின் பிரா-ணனைக் காப்பாற்ற அவர்கள் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள் என்றும் சான்றிதழ் வழங்குகிறார். ரோமர் (16: 3, 4,) சபையார் அனைவரும்கூட நன்றி தெரிவிக்க வேண்டிய அளவுக்கு தியாக உணர்வு, தொண்டுள்ளம் கொண்டவர்களாக இருந்தார்கள் என்று காண்கிறோம். மேலும் அதே அதிகாரம் 6-ம் வசனத்தில் எங்களுக்-காக மிகவும் பிரயாசப்பட்ட மரியாளை வாழ்த்துங்கள் என்று மரியாளின் தொண்டுள்ளத்தை நினைவு கூறுகிறார். இங்கேயும் மேடைப் பிரசங்க வாய்ப்புப் பற்றிப் பேச்சு இல்லை.

அப்போஸ்தலர் 16 : 14, 15ல் லீதியாள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட பிறகு பவுலையும், அவன் உடன் வேலையாட்களையும் தன்னுடைய இல்லத்தில் ஏற்றுக்கொண்டு உபசரித்து மகிழ்ந்தாள். இந்தச் சம்பவங்கள் எவைகளிலும் மேடைப் பிரசங்க வாய்ப்புகளை நாம் காணமுடியவில்லை

அப் 18 ; 26 . . . . . . ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவன் (அப்பொல்லோ) பேசுகிறதைக்கேட்டு அவனைச் சேர்த்துக்கொண்டு தேவனுடைய மார்க்கத்தைஅதிகக் திட்டமாகப் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள். இங்கே ஆக்கிலாவும், பிரிஸ்கில்லாளும் தனிப்பட்ட ஒரு நபருக்குக் காரியங்களை விளக்கித் தெளிவு படுத்துகிறார்கள். இதில் ஆக்கில்லாவுக்கு உதவியாக பிரிஸ்கில்லாள் வேத வசனங்களை எடுத்துத் தருதல், போன்ற பணிகளில் ஈடுபட்டிருக்கத்தான் வாய்ப்பு இருந்திருக்குமேயன்றி ஆண்கள் மீது அதிகாரம் செலுத்தும் வாய்ப்புக்கு ஆதாரமில்லை.

அடுத்து அப் 9 : 39-ல் தொற்காள் என்ற சகோதரியின் மரணத்தின்போது அந்தப் பகுதிகளில் வாழ்ந்த விதவைகளும், ஏழை மக்களும், தங்களுக்கு தொற்காள் கொடுத்திருந்த அங்கிகள், வஸ்திரங்கள் ஆகியவற்றைக்காட்டி தங்கள் நன்றிகளைத் தெரிவித்து அழுதார்கள் என்று வாசிக்கிறோம். அங்கேயும்கூட தொற்காளின் தொண்டுள்ளம், இரக்க சுபாவம் இவைகளைத்தான் நாம் காண முடிகிறது, அப்படியானால் பெண்கள் வாயே திறக்கக்கூடாதோ? அப்படியல்ல; பொறுமையாக இன்னும் சில வசனங்களைப் பார்க்கலாம்.

தீத்து 2 : 39-ல் முதிர்வயதுள்ள ஸ்திரீகள் பாலிய சகோதரிகளுக்கு நல்ல புத்திமதிகளைச் சொல்ல வேண்டும் என்று கூறுகிறது. அதாவது பெண்கள் பெண்களுக்குப் பிரசங்கித்து புத்தி சொல்லலாம். அதற்கு அனுமதி உண்டு என்று கூறுகிறது. மேலும் 2 தீமோ 1 ; 5ல் ஐனிக்கேயாளும், லோவிசாளும் இளைஞன் தீமோத்தேயுக்குக் கற்றுத்தந்த காரியங்களினால் அவன் விசுவாசத்தில் பெலனடைந்து பவுல் அப்போஸ்தலனே பாராட்டும் வண்ணம் சிறந்தவனாகக் காணப்படுவதற்கு அவனுடைய பாட்டியும், தாயாரும் பொறுப்பு என்கிறது. அப்படியானால் நம் குடும்பங்களில் வளரும் குழந்தைகளுக்கு சத்தியத்தை போதித்து, நல்லொழுக்கத்தில் வளர்ப்பது தாய்மார்களின் கடமை என்றும் புரிந்து கொள்ளுகிறோம். அதாவது பெண்கள் மத்தியிலும் சிறுவர்கள் மத்தியிலும் சகோதரிகள் போதித்து புத்தி சொல்வதற்குத் தடையேதும் இல்லை.

மாற்கு 15 : 40, 41ல் மகதலேனா மரியாள் வேறொரு மரியாள், சலோமே, இப்படி அநேக ஸ்திரீகள் முதலாம் நூற்றாண்டில் கர்த்தருக்குச் 'சேவை' செய்து தேவனைப் பிரியப்படுத்தினார்கள். நாமும் அவர்களைப் பின்பற்றி தேவனைப் பிரியப்படுத்த முடியும், ஆசீர்வாதத்தையும் பாராட்டையும் பெற்றுக்கொள்ள முடியும். ஆகவே தேவ ஆலோசனைகளைப் புறக்கணித்துவிட்டு தங்கள் விருப்பத்துக்கேற்றபடி நடக்க விரும்புகிறவர்களை மறந்து விட்டு சபையின் வேலைகளில் பெண்கள் எவ்வாறு பங்கு கொள்ளலாம் என்பதைப் பற்றி சிந்தியுங்கள்.

## இதோ சில ஆலோசனைகள்

1. முதலாவதாக நீங்கள் குடும்பத்தோடு உரியநேரத்தில் ஆராதனை மற்றும் சபை கூட்டங்களுக்குச் செல்லுங்கள். எபி 10 : 25,
2. வீட்டில் தினந்தோறும் வேத வாசிப்பு, ஜெபம் போன்றவைகளைத் தவறாமல் முழுக்குடும்பமும் சேர்ந்து செய்யுங்கள்.

3. பெண்கள் ஐக்கிய சங்கக் கூட்டங்களில் சத்திய வசனத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள், படிப்பறிவில்லாதவர்களுக்கு சத்தியத்தை விளக்கிக் கூறுங்கள்.

4. சபை கூடும் நேரத்துக்கு முன்பாக வந்து கர்த்தருடைய பந்தி ஆயத்தம், சபைகூடம் சுத்திகரிப்பு போன்ற பணிகளில் உதவி செய்யுங்கள்.

5. ஆராதனை-மற்றும் இதரக் கூட்டங்கள் முடிந்தபிறகு சபைக் கூடத்தை ஒழுங்குபடுத்த உதவுங்கள்.

6. ஞாயிறு பள்ளி நடத்த உதவுங்கள்.

7. ஆர்வமுள்ள மற்ற பெண்களையும் சேர்த்துக்கொண்டு கீழ்க்-காணும் திட்டங்களை அமுல்படுத்துங்கள்:-

அ. ஆராதனைக்கு வராதவர்களை, நோய்வாய்ப்பட்டிருப்பவர்களைப் பார்த்து ஆறுதல் சொல்லுங்கள்; ஜெபியுங்கள்.

ஆ. பெண்கள் ஐக்கிய கூட்டங்களில் தவறாமல் பங்குகொண்டு மற்ற சகோதரிகளையும் உற்சாகப் படுத்துங்கள்.

இ. வியாதியஸ்தர்களுக்குத் தேவையான எதாவது உணவுப் பண்டங்கள் தயாரித்துக் கொடுத்து உதவுங்கள்.

ஈ. விசேஷக் கூட்டங்கள் அல்லது நாட்களில் ஆராதனைக்கூடத்-தைக் கழுவுதல், அலங்கரித்தல் அல்லது வர்ணம் பூசுதல் ஆகிய பணிகளில் ஒத்தாசை செய்யுங்கள்.

8. உங்களுடைய சிநேகிதர்கள் அல்லது பக்கத்து வீட்டார்களை மதிய உணவுக்கோ அல்லது மாலை தேநீருக்கோ வாரம் ஒரு முறையோ அல்லது சௌகரியப்பட்ட பொழுதோ அழைத்து சத்தியத்தை எடுத்துச் சொல்லுங்கள்.

9. உங்கள் கணவருடன் சேர்ந்து சத்தியத்தைக் கற்றுக்கொள்ள விருப்பமுள்ள வீடுகளைச் சந்தித்து இயேசுவை அறிமுகப் படுத்துங்கள்.

10. உங்கள் அயலகத்தாருடைய தேவைகளையும், சூழ்நிலைகளையும் அறிந்து உதவி செய்யுங்கள். சில வேளைகளில் உங்களுடைய பரோபகாரம் அவர்களைக் கிறிஸ்துவுக்குள் வழிநடத்த உதவும். ஆகவே சபையின் பணிகளில் பங்குகொண்டு தேவ ஆசீர்வாதத்-தைப் பெற்றுக்கொள்ள விரும்பும் சகோதரிகளுக்குப் பல வாய்ப்புகள் இருக்கின்றன. அவைகளை நல்ல முறையில் செயல் படுத்தினால் சபையும் வளரும், நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையும் மேம்பாடு அடையும். ஆண்டவருடைய ஆசீர்-வாதமும் கிட்டும். வீணான சிந்தனைகளை அகற்றி அடக்கமாகச் செயல்படுவோம். அதுவே கர்த்தருக்குப் பிரியம்.

**-பெட்டி பர்டன் சோட்**

# கிறிஸ்தவசிந்தனையாளர்கள் கருத்தரங்கம்

இடம் : **தூய யோவான் கல்லூரிக் கலையரங்கம்**
பாளையங்கோட்டை 627 002.

நாள் ; **ஜீன் 1, 1991 சனிக்கிழமை**

நேரம் : **காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை**

பொருள் : **திருமறை வழியில் ஒற்றுமை**

தலைமை : மறை அறிஞர் : **G. பக்தமித்திரன்**, பெங்களூர்

தொடக்கவுரை : திருமறை ஆசான் ஆசிரியர் :
**E.Z. செல்வநாயகம்**, ஈரோடு

சிறப்புரைகள் : 1) பேராசிரியர் : **பா. வளன் அரசு**
பாளையங்கோட்டை

2) மறை அறிஞர் : **பீட்டர் சாலமோன்**, சென்னை

3) மறை அறிஞர் : **R. ஜோசப்**, பாளையங்கோட்டை

4) வானொலிப் பேச்சாளர் : **P.R. சாமி**, பெங்களூர்

5) பேராசிரியை : திருமதி. **சரோஜினி பாக்கியமுத்து**
திருநெல்வேலி

6) மறை அறிஞர் : **N. மெய்யழகன்**, பொள்ளாச்சி

7) பொறியாளர். **மரிய மைக்கேல்**, பாளையங்கோட்டை

அனுமதி இலவசம் ! அனைவரும் வாரீர்.

---

- ❋ வெளியூர்களிலிருந்து வருபவர்கள் திருநெல்வேலி ஜங்ஷனி-லிருந்து ஹை கிரவுண்டு செல்லும் நகரப் பேருந்துகளில் கல்லூரி மற்றும் விடுதிக்கு வரலாம்.
- ❋ 31-5-91 வெள்ளி இரவே வருகிறவர்கள் கல்லூரி விடுதி களில் தங்க வசதி உண்டு.
- ❋ தாய்க்குலத்துக்குத் தனி இடம்
- ❋ கலந்து கொள்கிற அனைவருடைய மதிய உணவுத் தேவைகள் சந்திக்கபடும்,

தொடர்பு முகவரி

**நெல்லை மாவட்டம்**

**சகோ. தாமஸ் டேவிட்**
213 N.H. காலனி
பெருமாள்புரம், பாளையங்கோட்டை

பேராசிரியர் **பா. வளன்அரசு**
1-A, நெல்லை நயினார் தெரு
பாளையங்கோட்டை
627 002.

**வ.உ.சி. மாவட்டம்**

**C. அருள்தாஸ்**
8, II தெரு
ப்ரைண்ட் நகர்
தூத்துக்குடி 628 008

**K. பாஸ்கர்**
108D, ஆபீஸர்ஸ்
டைலர் காம்பவுண்டு
ராஜீவ் நகர்
கோவில்பட்டி 627 702.

**குமரி மாவட்டம்**

சகோ. **K.P. தங்கராஜ்**
30C, N.G.O. காலனி
நாகர்கோவில், 629 002

YOUR ATTENTION PLEASE!

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9: 00 to 9: 15 P. M.
Fridays - 7:45 to 8: 00 P. M.

**HINDI** Satya Susamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi -110049
Thursdays-9: 00 to 9-15 P. M.
Fridays-- 9: 00 to 9:15 P. M.
Tuesdays-9 00 to 9:15 P. M.
Sundays-12 45 to 1: 00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2:15 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**ANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bangalore 560004
Sundays-1:45 to 2:00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

ஜெபியுங்கள் ! பங்கு கொள்ளுங்கள் !!

**திருமறை ஆசான் அன்புடன் அழைக்கிறது**

*நிகழ்வு* : திருமறை ஆசான் வாசகர் கருத்தரங்கம்

*நாள்* : 1-6-91 சனிக்கிழமை

*நேரம்* : காலை 9மணி முதல் மாலை 6மணி வரை

*இடம்* : தூய யோவான் கல்லூரிக் கலையரங்கம்
பாளையங்கோட்டை 627 002

*பொருள்* : திருமறை வழியில் ஒற்றுமை

*அனுமதி இலவசம் !* *அனைவரும் வாரீர்*

வெளியூரிலிருந்து 31.5.91 வெள்ளி இரவில் வருபவர்களுக்கு கல்லூரி விடுதியில் தங்க வசதி செய்யப்பட்டிருக்கிறது.

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press
Erode-638 003.

Editor. E.Z. Selvanayagam.

If undelivered please return to:
The Editor
**THIRUMARAI AASAAN**
Post Box No: 58 ERODE -638 001.

PRINTED MATTER BOOK-POST

TO